

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தென்காசி மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்தில் அண்மையில் மறைந்த முரசொலி செல்வம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தென்காசி மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செயல் வீரர்கள் கூட்டமும் புதிதாக நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பும் மேக்கரை மோகன் ரிசார்ட்ஸில் 19.10.2014 அன்று, மாவட்டத் தலைவர் சேக்கிழார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், துணைப்பொதுச்செயலாளர் வைரமுத்து, மாணவர் பேரவை அமைப்பாளர் நெல்லை பாபு, இளைஞரணி சந்தானம், மாவட்டச்செயலாளர் அருள்ஜோதிவ் பாபா மற்றும் பேரவைத் தோழர்கள் அலங்கரிக்கப்பட்ட முரசொலி செல்வம் அவர்களின் திருவருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

### சுவாமி விவேகானந்தரின் கோத்திரக் கேள்விக்கு

# மனோன்மணியம் சுந்தரனார் கூறியது என்ன?

## ஆளுநருக்கு பீட்டர் அல்போன்ஸ் பதிலடி!

**சென்னை,அக்.20-**

**சுவாமி விவேகானந்தரின் கோத்திரக் கேள்விக்கு மனோன்மணியம் சுந்தரனார் அளித்த பதில் குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டு ஆளுநர் ரவிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

சென்னை டிடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பாடப்பட்ட தமிழ்த் தாய் வாழ்த்தில் "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்" என்ற உன்னதமான வரிகளை விட்டுவிட்டு பாடியது மன்னிக்க முடியாத மாபெரும் தவறு. பாடியவர்கள் அந்த வரிகளை மறந்து விட்டனர் என்று டிடி சொல்வது பெரும் அபத்தம். குழுவிலே பாடிய அனைவருக்கும் ஒரே நேரத்தில் அந்த ஒரு வரி மட்டும் மறந்துபோனது என்று நம்புவதற்கு எட்டு கோடி தமிழர்களும் இளிச்சவாயர்களல்ல.

தமிழ்த்தாய் வாழ்த்தை 'ரசித்துப்' பாடுவேன் என்று புளகாங்கிதம் அடையும் ரவி, தவறு நடந்தவுடனே தவறைத் திருத்தி மீண்டும் சரியாக பாடவைத்திருக்க வேண்டும்.

ஒரு தவறு நடக்கும் போது, நடப்பது தவறென்று தெரிந்தபின்னரும் அந்தத் தவறை கண்டும் காணாதது போல நடந்துகொள்வது கயமை நிறைந்த பாசாங்குத் தனம்.

தமிழ்நாட்டின் உணர்வுகளை தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநரை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெறவேண்டும் என்ற முதலமைச்சரின் கோரிக்கை மிகச்சரியானது.

அந்த அற்புதமான வாழ்த்தை உயிரும்,உணர்வும் கலந்துபாடிய மனோன்மணியம் சுந்தரனார் வானுலகில் இன்று கண்ணீர் விட்டு அழுதிருப்பார். இது தொடர்பாக அவரது வாழ்வில் ஒரு முக்கிய செய்தி.

திருவனந்தபுரத்தில் சுந்தரனார் இல்லத்திற்கு சுவாமி விவேகானந்தர் வருகிறார். உணவருந்திய பின் உரையாடிக் கொண்டிருந்தபோது விவேகானந்தர், சுந்தரனாரிடம்,"தாங்கள் என்ன கோத்திரம்?"என்று கேட்க சுந்தரனார் சொன்ன பதிலை தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். " வேறு ஒரு தினமாகில் வினாவினைக் கேட்டவுடன் நான் வெகுண்டிருப்பேன். உறவின் விருந்துக்கு வந்த அந்த உயர்ந்த நண்பரிடம் நான் மெல்லிய குரலில் எனக்கும் கோத்திரத்துக்கும் சம்பந்தம் கிடையாது. தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சார்ந்தவன் நான் என ஆத்திரமின்றி கோத்திரக் கேள்விக்கு விடையளித்தேன்" என்று தனது நாட்குறிப்பில் எழுதியுள்ளார்.

ஆம்!ஆளுநர் ரவி அறிய வேண்டும்.நாங்கள் தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள்.

இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### வே.கிருபாகரன் தலைமை! வேலூர் மாவட்டக் கழக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# மாணவர்களுக்கு - கலைஞரின் கவிதைகள் - வசனங்கள் ஒப்பித்தல் போட்டி!

## ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.– டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. துவக்கி வைத்து சிறப்புரை!

வேலூர், அக்.20-

வேலூர் மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டுவிழா நிறைவு விழாவை முன்னிட்டு நாளை (21.10.2024- திங்கட்கிழமை), காலை 9.30 மணியளவில், வேலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், கலைஞர் அவர்களின் கவிதைகள், திரைப்பட நாடக வசனங்கள் ஒப்புவிக்கும் போட்டி, பள்ளி மாணவர்களிடையே நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் அமைப்பாளர் வே.கிருபாகரன் தலைமை தாங்குகிறார். கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாவட்ட துணைத் தலைவர் கே.கே. செந்தில், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ. வி.எம். மகாலிங்கம், சி.கல்பனா, கவிஞர் மா.வேல்முருகன், பு.மயில் வாகனன், டி.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்,

வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. ஆகியோர் போட்டியை துவக்கி வைத்து, வாழ்த்துரை வழங்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

வேலூர் மாவட்டக் கழக அவைத்தலைவரும் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினருமான தி. அ.முகமது சகி,

வேலூர் மாநகர கழக செயலாளர் ப.கார்த்திகேயன், எம்.எல்.ஏ.குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமலு எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, வேலூர் மாநகர மேயர் ஆ.சுஜாதா, துணை மேயர் ஏ.சுனில்குமார், தலைமைக் கழக நிர்வாகிகள் டாக்டர் வி. விஜய், வேலூர் ஜி.ரமேஷ். சேர்க்காடு. கென்னடி, சி. ஞானசேகரன் எக்ஸ் எம்.எல்.ஏ,

ப.நீலகண்டன் எக்ஸ்.எம். எல்.ஏ, நா.சுப்பிரமணி, எம் நூருல்லா, எம்.ராஜேஸ்வரி, பிரம்மபுரம். பழனி மற்றும் சிறப்பு அழைப்பாளராக, கலை இலக்கிய

பகுத்தறிவு பேரவையின் மாநில துணை செயலாளர் சி.கோபி ஆகியோர் கலந்து கொள்கிறார்.

மாவட்டக் கழக நிர்வாகிகளான சி.நரசிம்மன், ஜி.எஸ். அரசு, எஸ்.பாண்டியன், எல். மலர்விழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஆர்.பி. ஏழுமலை, ஏ.ஜி.ஆறுமுகம், வி.கே.ஆர். சுந்தரவடிவேலு, டி.விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள், வி.தயாநிதி, எஸ். கதிரேசன், சி.மணிமாறன், மா.பா.அன்புநிதி, ஜி. லோகநாதன், வி.டி.சிவகுமார், கே.கண்ணன், ஆலியார் அர்ஷத் அகமத், எஸ்.பி.சக்திதாசன், கே.தயாளமூர்த்தி, ஜெ. சர்மிளா, சி.சந்திரசேகரன், எஸ்.சுஜாதா, ஒன்றிய கழக செயலாளர்கள் சி.எல். ஞானசேகரன், ஜி.குமரபாண்டியன், எல்.ரவிச்சந்திரன், எஸ்.சரவணன், கே.சீதாராமன், கள்ளூர் கே. இரவி, அ.அன்பரசன், எம். டேவிட், இரா.முருகேசன், கே.ஜனார்த்தனன், பி.வெங்கடேசன், என்.கஜேந்திரன், நத்தம் வி.பிரிதீஷ், என்.இ.சத்தியானந்தம், கே.கருணாகரன், எஸ். தணிகாசலம், சி.ரவி, ஏ.கே. முருகன்,

எஸ். சவுந்தரராஜன், ஆலியர் ஜுபேர் அமைத், ஜி.வன்னிய ராஜா, என்.பரமசிவம், ஆர்.பி.இ.சசிகுமார், ஏ. கணேஷ்சங்கர், எஸ்.தயாள் ராஜ், வி.ஜி.கே. சுந்தர்விஜி, ஆர் சத்யாமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் வேலூர் மாவட்டக் கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளர் கே.பி. கருணாநிதி நன்றி கூறுகிறார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

இ.பொ.து.ஆ.வா.ப.ந.க.எண்.D5/102/2024 **குறுகிய கால மின்னணு ஒப்பம்**

**கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)**

| கோப்பு எண் | பணியின் விவரம் | முன் வைப்பு தொகை |
|---|---|---|
| **D5/102/2024** | **பெருநகர சென்னை மாநகராட்சி, ஆய்வு வாகன பணிமனைக்கு 365 நாட்களுக்கு 26 ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவது** | **ரூ.99,500/-** |

**ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 29.10.2024 மதியம் 3.00 மணி**
**ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 30.10.2024 மதியம் 3.30 மணி**
**மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in**

செ.ம.தொ.இ / 4371 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)**


### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

# குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல் முடிவு!

## தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், வேலூர் மாவட்டம், குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.சரவணன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காரணத்தால்; வேலூர் மாவட்டம், குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 5 (சனிக் கிழமை) அன்று ரூ.1000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கு கே.கே.செந்தில்குமார் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**வேலூர் மாவட்டம், குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளராக (பொது)**

**திரு.கே.கே.செந்தில்குமார்,** எம்.ஏ., எல்.எல்.பி., எண். 3/39, கல்லப்பாடி கிராமம் அஞ்சல், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# தென்காசி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட கொ.பிரகாஷ், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **ஜெ. ஜலால்மைதீன்** (42, தமிழ் குடில், காயிதேமில்லத் 2வது தெரு, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராகவும்;

மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சேதுசுப்பிரமணியன் அவர்கள் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவரை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, ரா.மகேஷ்குமார் (203/2, மேற்குத் தெரு, குவளைகண்ணி, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்) தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.10.2024

**கார்த்திகேய சிவசேனாபதி,**
செயலாளர்,
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

### இதுவரை ரூ.6 கோடியே 9 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 9 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 18–10–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

**நிதி உதவி பெறுவோர் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | ஜெ.தங்கராஜ், 104ஆ–வது வட்ட செயலாளர், அண்ணாநகர் மேற்கு, சென்னை | – 25,000/– |
| 2. | எம்.கமால்தீன் (ஏ) மு.கலைக்காமல், சொற்பொழிவாளர், கம்பம், தேனி | – 25,000/– |
| 3. | எ.வி. நெடுஞ்செழியன், செட்டித் தெரு, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர்–26. | – 25,000/– |
| 4. | வி.எல்.ஜோதிபிரகாசம், சாமிநகர் 4வது தெரு, ஓட்டேரி ரோடு, வேலூர்–2. | – 25,000/– |
| 5. | சி. வீரசேகர், பொத்தரை அஞ்சல், போளூர், திருவண்ணாமலை மாவட்டம் | – 25,000/– |
| 6. | திருமதி ஆர்.தைலம்மை, திருச்சிற்றம்பலம் அஞ்சல், பட்டுக்கோட்டை, தஞ்சை | – 25,000/– |
| 7. | எ.ராமச்சந்திரன், இராதாநல்லூர், மணல்மேடு, மயிலாடுதுறை மாவட்டம். | – 25,000/– |
| 8. | என். உதயம் (எ) ராமலிங்கம், தெற்கு எடத்தெரு, புத்தூர், திருச்சி–17. | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ. 2,00,000/-** |




மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர்
கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க
19,20-10-2024 அன்று பல்வேறு நலத்திட்டங்களை வழங்கவும்,
அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும்
சேலம் மாவட்டத்திற்கு வருகைத் தரும்
மாண்புமிகு. தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!
மாண்புமிகு. இரா.ராஜேந்திரன் அவர்கள்
சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு. எஸ்.ஆர்.சிவலிங்கம் Ex.MLA அவர்கள்
சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
...... அன்புடன் வரவேற்கும் ......
திருமதி. எஸ்.வெண்ணிலாசேகர்
ஒன்றிய கழக செயலாளர், அட்மா குழு தலைவர் - வீரபாண்டி வட்டாரம், Ex. வீரபாண்டி ஒன்றிய பெருந்தலைவர்.
வீரபாண்டி ஒன்றிய தி.மு.க, சேலம் மாவட்டம் - கிழக்கு